125

பிஸ்மில்லாஹி.

3-OCT 192

வந்தேமாதரம்—அல்லாஹு அக்பர்.

மானிலம் தழைக்க வந்த

# மஹாத்மா காந்தி அவர்களின் ஆணைக்கிணங்கி

செங்கல்பட்டு ஜில்லா

ஷேக்கு முஹையதீன் சாயபு

குமாரன்

அசன் மோதீன் சாயபு

பாடிய

# தேசியகீதம்.

சென்னை-சூளை,

ஸ்ரீ 'பாரதி' அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது.

1923.

லை அணா 1.

O-,1MMO,T
11123
179682

894.8111
2904

பிஸ்மில்லாஹி

# தேசீய கீதம்.

(மதுவிலக்கு-இத்தனை தாமத மேதய்யா யென்பதுபோல்)

இ-ம். நாதநாமகிரி சாப்பு தாளம்.

பல்லவி.

மதுவென்ற கள்ளை குடி யாதே-பாவிமனதே
மதுவென்ற கள்ளை குடி யாதே (மது)

அநுபல்லவி.

மதுவென்ற கள்ளை குடித்தால் மயக்கம்பெற்று
மனது சோர்ந்து மாதாவை யறியாத
பெரும்பாவிகள்போல் அலைய செய்திடும் (மது)

மதுவென்ற கள் போதையல்லவா—மானிலந்தன்னில்
மதியை மயக்கிடும் பொருளுமல்லவா
தீரவீரமும் போக்குமல்லவா—திக்கெங்கு சென்றாலும்
தீவினைக் களாக்குமல்லவா
பேய்பிடித்தாட்டும் பிள்ளைபோல்
பேரை வீணாகக் கெடுக்கும்
தலையும் உடலும் சுழன்று மண்ணில்
தள்ளாடி தடுமாறி விழுந்திடும் (மது)

179682



பாரினில் பாவிக்காளாக்குமே—பாழும் குடியால்
பக்கம் வருவோர் மனது கூசுமே
தர்க்க இபுலீசுக் களாக்குமே—தந்தையானாலும்
யெதிர்த்து வம்புகள் செய்யச் சொல்லுமே
அடுத்தபேர்களை கெடுக்கச்செய்யும்
படுத்திருந்தவர் மூட்டை யெடுக்கும்
கடையைத் தேடிப்போய் குடித்தும்
கழுதைகள்போல் அலையசெய்திடும் (மது)

பொன்னும் பொருளும் செல்வம்போகுமே - போதைகுடி
பொய்யும் களவும் சண்டை பெருகிடுமே [யால்
பெண்டுபிள்ளைகளும் அலையலாக்கிடுமே—பெருங்குடியால்
பித்தனைபோல் சுத்தம் போக்கிடுமே
வருத்த பிணிகளும் பெருத்துப் போகும்
வம்புசண்டைகள் அதிகமாகும்
கருத்து முகங்களும் சிறுத்து போய்விடும்
வுருட்டி கண்களை சிவக்க காட்டிடும் (மது)

கிருக்கும் முறைப்பும் சொந்தமாக்கிடுமே—சோம்பேறிகுடி
பந்து ஜனங்களை துறத்தி விலக்கிடுமே [யும்
மூர்க்க குணத்தையே சேர்க்கசெய்திடுமே-மூதேவிகுடியும்
முகத்தின் வடிவை துறத்தி விலக்கிடுமே
அல்லல்பட்டு அலையச்செய்திடும்
அன்னை தந்தையின் சொல்லை யெதிர்த்திடும்
சொந்த மனைவியும் கூழுக்கலைந்திடும்
சோரம்செய்து பிழைக்க நாடிடும் (மது)

வாந்தியும் துர்நாற்றமும் வீசுமே—போதை மிகுந்தால்
தலையின் பாரம் மெத்த காணுமே
பாட்டா குடிக்கத் தேட்டைத் தேடுமே
பாரிலலைந்து பஞ்சவேடம் தரிக்க நாடுமே
மூல பானையை இறக்கி வைத்து
மூடி வைத்த பொருளெடுக்கும்
ஜாடி கள்ளை குடித்து வந்தாலும்
கும்மா குத்துகள் வாங்க செய்திடும் (மது)

மேனியின் சீர்கள் குறைந்தோடும்—மோகக்குடியால்
தரிக்க வுடையும் கிடைக்க தரிதாகும் [கள்
சாபம் பெற்றிட கோபம் மிகுந்திருக்கும்-சஞ்சலதொல்லை
யெந்தநாளும் சொந்தமாய்வாழும்
அஞ்சாமல் நெஞ்சம் துணிந்து
அனியாய கோறம் புரிந்து
பெரிய வெறிநாய் போலலைந்து
பேரை வீணாகக் கெடுக்கும் (மது)

சாங்கைபோக்கி பொய் சத்தியம் செய்திடுமே-பொல்லாத
அங்க ஒளிவை பங்க படுத்திடுமே [குடியும்
யெங்கு சென்றாலும் வம்புசெய்திடுமே—யென்றைக்கும்
குடிய னென்ற பழியை சுமத்திடுமே [பாரில்
பாவமும் பழியும் சூதும்
நாடியே பிழைக்க செய்யும்
தேடியே நரகவேதனை
கூட்டியே அழைத்து சென்றிடும் (மது)

மிருகமாட்டின் அறிவை மேலாக்கும்-போதைகளுண்டால்
பொல்லாச் செயலின் செய்கை பெரிதாக்கும்
அழுகை நரகத்தில் மெழுகுபோலுருகும்-அங்கம்வுருகி
அனல்கள் பெரிய தீகள் பற்றியழும்
தாகம் மஹாஷரில் யேக்கம் பெரிதாகும்
தாங்க முடியாத் துன்பம் பெருகிடும்
பாலம் கடந்தேற பல்லே காட்டிடும்
பாரம்சுமந்து கீழ் கிடக்கச் செய்திடும் (மது)

கஞ்சா வபினியின் நேசம்பெரிதென்று-அனுதினமும்
அதனையுண்டால் படும்துன்பம் பெரிது
சண்டிமட்டிகள்போல் திரிந்தலைந்து-சாருயவெரியால்
தரணியில் நின் றழுவோரை பார்த்து
பாரினில் கண்டறிந்து நீயும்
பாவங்கள் யேன் சுமக்கபோராய்
பாடிப்பாடி பாழும் மனதே
கோடி சரணம் தந்தே. னுனக்கினி (மது)

வாசகப் புராணங்களும் படித்து-பாழும்குடியால்
பறதவித்தோர் பாரில் மெத்தவுண்டு
நாற்றகுடியின் நேசம்விட்டுவிடு-யெங்கெங்கு சென்றாலும்
வாசம் பெற்று வாழ்ந்திருப்போ மென்று
ஆசையுடனே ஆண்பிள்ளை நீயும்
ரோஷமுடனே யெழுந்து
அசன் முஹய்யதீன் சொல்லைபாடி
தெளிந்து பாரில் சோதித்து (மது)

---

# தந்தைகளிடம் பிள்ளைகள் அன்னிய நாட்டின் ஆடைவேண்டாமென்று முறையிடுவது.

(அய்ச நாலேநாலே யென்னும் வர்னமெட்டு.)

இ-ம். ஹிந்துஸ்தானி தோடி ஆதிதாளம்.

பல்லவி.

இனி வேண்டாம் வேண்டாம் அன்னிய நாட்டின்
ஆடையின் சொந்தம் தந்தயே வுமக்கு
சொந்த பிள்ளை யிப்பாலருக்கு (இனி)

அல்லும் பகலும் ஆசைமிகுந்து
அமுதையூட்டி ஆதரித்து
அங்கமீதில் பங்கமடைய
தரித்ததோர் தளுக்காடையே (இனி)

அன்னிய நாட்டின் ஆடையினலே
அல்லல்களுண்டோ மிப்புவிதன்னிலே
அரிந்து நீர்பாரும் அதிலுள்ள கோறம்
அகில மதிலே திர்தாடிட கோபம் (இனி)

தானத்தை மறக்கும் கோபத்தில்வசிக்கும்
குணமும் கெடுக்குமன்யர் ஆடையின் சினேகம்
தந்தயே வேண்டாம் தன் பொருளொழிக்க
தறணியில் வாய்த்தோர் ஆடையின் சினேகம் (இனி)

பட்டதோர் துன்பமதில் பாரிலனேகம்
பலர் நாட்டின் வுடையென்னும் ஆடையினால்நாலும்
பொருள்பரிகொடுத்து பொய்வேடம் தரித்து
ஆவியலைந்து பாரில் ஆண்மையை போக்கும் (இனி)

சறட்டும் கோட்டும் சரிகை மல்லும்
தரித்தணையும் பெரு வேடத்துக்குகந்த
தாளங்கள் போட பாதத்தை பழக்க
பாரில் கண்டோமே யன்றி பலனென்று மறியோம் (இனி)

தங்கயர் குகந்ததோர் ஆடைகளுடுக்க
தந்தைகளே நீர்தேடியே கொடுத்த
பலர் நாட்டின் வுடையால் மங்கைகள் வீணாய்
பாரிலலைவதையும் பார்த்தோமிக் கண்ணால் (இனி)

கன்னியற்கேற்றதோர் கருத்துக் கிசைந்த
துயிலை யுடுக்க மன்னர் துணையிருந்தால்
தவமது கெடுக்க தறணியில் பிறந்த
மங்கைகளென்று சும்மா வீண்பேர் கெடுக்க (இனி)

இக்கோலம் பெற்று யெக்காலமும் மலைந்திட
பலநாளும் கற்பித்த தந்தை யென்குருவே
சீருடன் கேளும் சிறுவய தென்றென்னை
சிங்காரித் தழைத்திட்ட அன்னியருடையே (இனி)

அன்று அணிந்தாடையில் இன்று பிழைக்ககையில்
பொருளுமில்லை வேறு தொழிலுமில்லை யெனக்கே
இனி சுகமடைய இன்பகுரு தந்தையே
காந்தி மஹானுரைத்த கதருடை தவிற (இனி)

கதருடை அணைந்திட கவலைகள் பறந்திட
கர்த்தனருள் பாதம் கட்டாயம் கிடைத்திட
தந்தைகள் நீரே கிருபை செய்வீரே
தன்மையுாய் வாழ்ந்திட கதருடை தவிற (இனி)

அருமையென் தோழர்கள் தந்தயேவும் பாலர்கள்
பவளக்கொடி மணிபோல் இருக்கும் இளமைதர்கள்
காலம் கடத்திடாமல் கதருடை நெய்திட
கர்பித்தருளு மெந்தன் கண்மணி தந்தையே (இனி)

தங்கைகள் நூலை நூற்க காளைகள் ஆடைநெய்ய
கூட்டாயமிவ் வேலைகள் கருத்தி லமைந்திருக்க
விடைதருவீரே விரைவாக நீரே
பலநாளும் செய்தபாவம் பறந்தோடும் தந்தையே (இனி)

கதருடை கோர்த்திட கன்னியர்கள் பழகிட
காலமும் செழித்திட தன்குலம் வாழ்ந்திட
துணைகள் செய்வீரே சுயருஜ்யம் பெற்றிட
மக்களு கந்துவாழும் சத்யமாய் தந்தையே (இனி)

அன்னியர் நூலும்வேண்டாம் அதிலுள்ள ஆடைவேண்டாம்
அசன் முஹறய்யதீன் சொல்மொழியை விலக்கவேண்டாம்
ஆசான் யெனங்குந்த காந்தி மஹானுரைத்த
காலம் செழித்துவாழ்க கதருடை தவிற. (இனி)

## வேறு.

(ஆண்டி பண்டாரம் மெட்டு.)

பல்லவி

கதர்வாங்குவீரே கர்மம்
துலைந்த தென்பீரே துயில் (கதர்)

துன்பதொழில்பறக்கும் வம்புசண்டைவிலக்கும்
கஞ்சிகஞ்சிக்கலைந்திருக்கும் காலமதைவேரறுக்கும் (கதர்)

பாடுபட்டுதேடும்பணம் பாலர்கள்கைகொள்ளாமலே
காடுசெழித்துமிக நன்மைதரும் நமதுநாட்டு (கதர்)

யேழைகள்வயறடித்து யேமாற்றிபிழைத்திருக்கும்
சூதனென்றுபேர்கெடாமல் சுகம்தருகும் நமதுநாட்டு ()

ஜாதிஜனம்பிரித்து நீதிகல்விமறந்து
பாரிலலைந்திருக்கும் பாவிகளைபற்றறுக்கும் (கதர்)

கன்னிகைபெண்பிள்ளைகளும் கண்ணீர்சொரிந்துவாழும்
பஞ்சமதைபோக்கடிக்க பஞ்சபூதம்நெய்தவெள்ளை (கதர்)

ஆதியிலன்னளையிலே முன்னோர்கள்வாழ்க்கையிலே
பஞ்சமதுநேர்ந்திடாமல் பாதுகார்த்தநமதுநாட்டு (கதர்)

அண்டிபிழைக்கவந்து அடியோடுவேறறுக்கும்
பஞ்சமாபாதகத்துக்கே போகவொட்டாநமதுநாட்டு ()

கோபம்கொலையும்பொய்யும் பாவம்பழியும்சூதும்
நாடிபிழைக்கொணுமல் நன்மைதரும்நமதுநாட்டு (கதர்)

கள்ளுபீர்சாருயங்கள் கலந்துகுடித்துவிட்டு
புளுகரைபோல்பினத்திடாமல் கல்விதரும்நமதுநாட்டு ()

179682

## தேசாபிமானிகள் சிறை சென்ற காரணம்.

(சென்று கனிபறித்துக்கோண்டு என்ற மெட்டு.)

பல்லவி.

சென்றார் சிறையில் தவம்செய்து
வருவா றுலகம்வலஞ் சுழன்று

தேசாபிமானிகள் சிறப்புள்ள நாதாக்கள்
வறம்பெற்று வந்துலகம் செழிப்புற்று வாழ்வதற்கு (சென்)

ஒற்றுமைதவத்துடையோர் வுண்மைவேதங்களோதுவோர்
சத்திய சிகாமணியும் பக்தர்கள் சவுபத்தலியும் (சென்)

லாலா லஜபுத்ரராவும் பாட்சா மஹம்மதலியும்
ஆசையுடனேயெழுந்து ரோஷமுடனே துணிந்து (சென்)

டாக்டர் கிச்லுமன்னரும் யாகூப்வுசேன் சேட்டும்
வாசகப்புராணங்கள் பாடி நேசமுடனிவர்கூடி (சென்)

சீ யார் தாசறவரும் நீதிமிகுந்த ஞானரும்
பாரிலுள்ள மாந்தர்களும் நீதிவரு காண்பதற்கு (சென்)

காந்தி மஹானும் ஞான கல்வி விளக்கொளிவும்
மற்றுமுள்ள பேர்களுடன் சத்தியநீதி கிடைக்க (சென்)

ஞாணுதி சேனைகொண்டு வுலகம் வலஞ்சுழன்று
நீதிபெரும் சுயராஜ்யம் அரசின் முடிதரிக்க (சென்)

அசன் முஹய்யதீன் பாடும் அருமை கவிகள் கேட்கும்
மாந்தர் சிகாமணிகள் மகிட்சியுடன் வாழ்ந்திருக்க (சென்)

# ஆனந்தக் களிப்பு.

பல்லவி.

காந்தி மஹாத்மாவை போற்று-மன்னர்
மனதின் நினைவை தெளிவாக்க யேற்று (கா)

பாறினில் அவதாரமாக-புவி
ராஜ்யத்தில் வாழும் பாலரைக் கார்க்க
புலியும் பெரும் பசுவுமாக-கூடி
ஒற்றுமையாகவே வாழ்ந்திடுமென்றே (கா)

கட்டட மாளிகை விட்டு-மன்னர்
காலமும் நமக்காக கஷ்டங்கள் பட்டு
நிலையும் பதிகளும் விட்டு-நம்மை
கார்த்திடவேதவம் செய்குரூர் என்று (கா)

பொன்னும் பெரும்பொருள் செல்வம்-கூடி
வாழ்ந்திடும் மாதர்கள் ஆசையின் மோசம்
நிற்காது யிதுமிக நாசம்-மன்னர்
காந்தி மஹாத்மாவின் வாய்க்கமே மோக்ஷம் (கா)

ஜாதி பேதங்கள் மறந்து-குரு
காந்தியின் சொல்வாக்யம் அமுர்தமென் றறிந்து
கள்ளு சாறுயம் மறந்து-வெறி
கஞ்சாவடித்து அலையாதே நின்று (கா)

பூட்சு தொப்பிகள் மாட்டி-அதர்க்
கேற்றதோர் கோட்டும் சறுய்களும் கட்டி
துரை பிள்ளைபோல் கையை நீட்டி நீ
நடப்பதினால் என்ன சுகமடா மட்டி (கா)

மேனியில் சாம்பல் பூசாதே - வெறி
கஞ்சாவடித்தால் சாமியென் றெண்ணாதே
பற்பலதெய்வத வேண்டாதே-நம்மை
பண்டைத்தாளும்பரம சிவனை யறிந்து (கா)
நித்திரையில் செத்த காயம்-இது
நிற்காதுநிற்காது என்றைக்கும் மோசம்
பக்தி மஹாத்மாவின் வாக்கியம்-எங்கும்
பிரசங்கமாகுவதே பெருமோக்ஷம் (கா)
காலமும் கஷ்டங்கள் பட்டு-கூலி
வேலைகள் செய்து அலைந்து திரிந்து
முக்காலுமே பறி கொடுத்து-நீயும்
மூதேவிபோல் அலையாமலே நின்று (கா)
அன்னிய நாட்டின் துணிகள்-அந்த
ஆசையா லல்லவா அலைகுது மக்கள்
தேடிய பொன்னும் பொருள்கள்-இதனால்
சேதமாகுதென் றறிந்து மனதில் (கா)
பஞ்சுபரித்திட வேணும்-அதை
பக்குவமாக நூலாக்கவே வேணும்
குஞ்சும் குழந்தையும் தானும்-கூடி
நெய்து ஆடைதன்னை அணிந்திடவேணும் (கா)
ஆனை குதிரையொட்டை கூட்டம்-இன்னும்
துஷ்டமிருக புலிகள் சிங்கமும்
பேயும் பிசாசுகள் பூதம்-இதை
அடக்கி அரசாளும் மானிட நீயும் (கா)

மரக்கனி தோப்புகள் சாலை - இன்னும்
விதமான வாசங்கள் நிரைந்த பூஞ்சோலை
தரணியில் புசித்திட பாலை-நமக்கு
தவறாமல் இருக்க என் அலைகிறாய்,புவியில் (கா)

ஈட்டி கட்டாரி,கொம்பு தடிகள்-இன்னும்
பற்பல விதமான ஆயுத பாணங்கள்
எதிர்த்தாலும் நுழையாதுன் உயிரில்-என்று
படைத்து வளர்த்து விடுத்தானே கடவுள் (கா)

கர்த்தன் படைத்திட்ட காயம்-காலன்
கண்டு அழைத்திட்டால் சென்றிடவேணும்
அற்பர்க்கு தெரியாமல் மாயம் செய்து
பிழைத்து வருகிறாரென்றுமே நீயும் (கா)

ஊரைத் பகைத்திட வேண்டாம்-உண்மை
வேதப் பிரசங்கம் மறந்திட வேண்டாம்
கல்வியை இழந்திட வேண்டாம்-வெகு
காலமாய் வாழ்வோமென்றெண்ணங்கள் வேண்டாம்

கள்ளு சாராயங் குடியாதே - அதனால்
கைசேதப்பட்டு அலைந்து திரியாதே
களவும் பொய் சண்டை செய்யாதே-பல
மாதர்களின்மேல் இச்சைநீ கொள்ளாதே (கா)

## வேறு இராகம்.

(செந்தூர்வளரும் முருகோனே என்ற வர்னமெட்டு.)

பெரும்-மானிலத்தில்வாழும் மன்னரே
 பேதைபோற்றும் மொழியைக்கேழ்ப்பீரே
யேக்கம்-தீர்க்க வழியைதேடுவீரே
 யெந்தன் சகோதர்களே-யெந்தன் சகோதர்களே
 யெந்தன் சகோதர்களே (பெரு)

ஜாதிபேதங்கள் நமக்கேது ஐயா-ஜாதி
 நம்மைபடைத்தாளும் கடவுளிரண்டேது
வுண்மை வேதமொழிகாண நீர்கண்டு
 அறிந்துசற்று பாரும்-அறிந்துசற்று பாரும்
 அறிந்துசற்று பாரும் (பெரு)

கண்டு-அரியாமல் காலங்கழித்தோம்
 அதனல்-கக்ஷி அனேகமாய்ப்பிரிந்தோம்
வரும்-கூத்தாடிக்கே பெருங்கொண்டாட்டம்
 பொருள்கள் பரிகொடுத்தோம்-பொருள்கள்
பரிகொடுத்தோம் பொருள்கள் பரிகொடுத்தோம் (பெரு)

இனி-வந்திடுமே பெருந்திண்டாட்டம்
 வரும்-வழியில் அணைதடுக்கநாடும்
வாசம்-பெற்று வாழ்ந்திருக்கயெல்லோரும்
 ஒருமனதாய் சேரும்-ஒருமனதாய் சேரும்
 ஒருமனதாய் சேரும் (பெரு)

179182



பற்பல்தெய்வம் நமக்கேது
வுலகம் ஆளும் கடவுளன்றி வேறு
பாறில்-பாடிப்பிழைப்பதெல்லாம் சூது
அகிலமதின்மீது-அகிலமதின்மீது
அகிலமதின்மீது (பெரு)

மன்னர்-காந்திமஹாத்மாவின் சொல்வாக்கியம்
எங்கும்-பிரசங்குமாகுவதே மோக்ஷம்.
இதில் நிகரேது வேறொருவேதம்
நமக்குபிரதானம்-நமக்குபிரதானம்
நமக்கு பிரதானம் (பெரு)

கைத்தொழில்-கற்றுணரமறந்தோம்
பலரை-கையேற்றிப் பூசித்துக்கொண்டிருந்தோம்
வெகு-கஷ்டதிசை யடிமையானோம்
நீர் உண்மையாகபாரும் நீர் உண்மையாகபாரும்
நீர் உண்மையாகபாரும் (பெரு)

பாலன்-அசன் முஹையத்தீனே
பாரில்-கேழ்க்கும் பொருளுரைக்காமுன்னே
பக்தி-சத்தியம் நிறைவேறத்தானே
குடியைமறந்தேனே-குடியைமறந்தேனே
குடியை மறந்தேனே. (பெரு)

---

இப்புத்தகம் தேவையுள்ளவர்கள் சென்னை ராயபுரம் ஆதம்சாயபு வீதி, 37-வது நெம்பர் குப்புசாமி நாயகரிடம் பெற்றுக்கொள்ளலாம்.